**ஊவா பரணகம பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா பரணகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஊவா பரணகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 29 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 153,963,289 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 4,831,577 நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படாத 79 நிர்மாணங்களுக்குரிய பெறுமதி கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அமுல்படுத்துவதற்கு முடியாத வேலைகள் கடன்கொடுத்தோர் பதிவேட்டில் இருந்து நீக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தவேண்டிய மின்சாரம், தொலைபேசி மற்றும் மேலதிக நேரபடியாக கூட்டு மொத்தமாக ரூபா 319,096 அட்டுறு செலவினமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய கிடைக்க வேண்டிய முன்பள்ளிப்பாடசாலைக் கட்டணம் ரூபா 199,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7,376,603 ஆன தளபாடங்கள் மற்றும் பொருத்திகளில் 438 அலகுகள் மற்றும் ரூபா 16,526,550 ஆன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் 264 அலகுகள் தொடர்பாக நாளதுவரையான நிலையான சொத்து பதிவேடு, பட்டோலைகள் மற்றும் பௌதிக இருப்பை தெளிவாக இனங்காண முடியாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் மீதி மற்றும் இயந்திர உபகரணங்களின் மீதி இணைப்புக்களின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | நிதிப் பிரமாணம் 571 | காலாவதியான ரூபா 75,210 ஆன 10 நானாவித வைப்பு மீதிகள் ஓய்வு பெறச்செய்யப்பட்டிருக்க வில்லை. | இரண்டு வருடங்களுக்கு மிஞ்சிய வைப்புக்களை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான வைப்புக்களை ஓய்வு பெறச் செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 26/92 | 10 வாகனங்களில் அரச இலச்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வாகனத்தின் கதவுகளில் பதிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,859,622 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,018,030 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம ான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 4,519,540 | 7,240,850 | 4,351,273 | 2,889,576 | 3,269,540 | 3,548,626 | 1,872,425 | 1,676,201 |
| **(ii)** | வாடகை | 6,664,750 | 5,452,416 | 4,936,054 | 516,361 | 5,073,480 | 3,902,785 | 3,268,841 | 633,945 |
| **(iii)** | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,570,000 | 1,294,255 | 1,294,255 | | 1,205,000 | 1,250,754 | 1,249,754 | 1,000 |
| **(iv)** | ஏனைய வருமானம் | 27,475,500 | 15,521,055 | 11,412,146 | 4,108,908 | 5,260,000 | 8,792,616 | 5,860,915 | 2,931,701 |
| | மொத்தம் | 40,229,790 | 29,508,576 | 21,993,728 | 7,514,845 | 14,808,020 | 17,494,781 | 12,251,935 | 5,242,846 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 862,645 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க்கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 380,579 அறவிடப்பட்டிருக்கவில்லை. | வாடகையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 16,236,098 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 24,905,646 காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் தமது எல்லைக்குள் மக்களுக்கு நடமாடக்கூடிய சகல இடங்களிலும் அவர்களுக்கு தேவையான பிரகாரம் பொது மலசலகூட வசதிகள் வழங்க வேண்டியிருந்த போதிலும் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் கணிசமான அளவில் வருகைத் தருகின்ற போப்பும்புர எல்ல சுற்றுலா பிரதேசத்தில் போதியளவான மலசலகூடம் மற்றும் கழிவகற்றும் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொது மலசலகூட வசதிகளை வழங்குவதற்காக பிரதேச செயலகத்திலிருந்து காணியொன்று வழங்கப்பட்டுள்ளதுடன் காணியை சட்ட ரீதியாக கையேற்றதன் பின்னர் உரிய பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொது மக்களுக்காக தேவையான சுகாதார வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் கல்வி பயிலுகின்ற மாணவர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 49,000 செலவில் அச்சிடப்பட்டிருந்த 1000 சான்றிதழ் பததிரங்கள் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் தலைவரின் ஆலோசனையின் அடிப்படையில் ஊவா மாகாண அச்சகத்தின் சான்றிதழ் அச்சிடப்பட்டிருந்தது. | தேவைகளை இனங்கண்டு அதற்காக நீதிகளை பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்குரிய டபல் கெப் வண்டியின் எஞ்சின் 2012 ஆம் ஆண்டின் போது மாற்றப்பட்டு புதிய எஞ்சின் பொருத்தப்பட்டிருந்த போதிலும் புதிய எஞ்சின் இலக்கம் வாகனப் பதிவுச் சான்றிதழில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதுபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய எஞ்சின் இலக்கம் வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | புதிய எஞ்சின் இலக்கத்தின் கீழ் வாகனப் பதிவு சான்றிதழ் பெறப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மூலம் பேணிச் செல்லப்படுகின்ற சிறு கொங்கிரீட்கல் உற்பத்தி வேலைகள் 2017 ஆண்டிலிருந்து உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 810,000 மற்றும் ரூபா 745,000 பெறுமதியான 02 சிறு கொங்கிரீட் கல் உற்பத்தி இயந்திரங்கள் விலைவற்று காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு சபையினால் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்களை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு 15 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் 32 பேரை சேவையில் ஈடுபடுத்தியதன் காரணமாக 17 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர். | பதிலளிக்கப்படவில்லை. | மிகைப் பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |